# கம்பராமாயணத்தில் இசைச் செய்திகள்

**தி. அதிசய பரலோக ராஜ்[1] & முனைவர்.ச .உமாமஹேஸ்வரி[2]**

**[1] முனைவர் பட்ட ஆய்வாளர்**

**[2]உதவிப்பேராசிரியர் & முதல்வர்**
**கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி**

**திருச்சி – 1**

8

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியத்தில் தனிச்சிறப்புடைய மகாகாவியம் கம்பராமாயணம் ஆகும்.கம்பர் தனது காவியத்தில் சமுதாயம், பண்பாடு, கலை, இசை ஆகியவற்றை இயல்பாகப் பதிவு செய்துள்ளார். இசை என்பது மக்களின் வாழ்வியல், அரசவைக் கலாச்சாரம், திருமண விழாக்கள், பக்தி நிகழ்வுகள் மற்றும் இயற்கை வருணனைகளுடன் இணைந்த கலையாகக் கம்பராமாயணத்தில் காணப்படுகிறது. யாழ், குழல், முழவு, சங்கு போன்ற இசைக்கருவிகளும், பாடல் மற்றும் நடன மரபுகளும் காவியத்தின் பல இடங்களில் இடம்பெறுகின்றன. இக்கட்டுரை கம்பராமாயணத்தில் இடம்பெறும் இசைச் செய்திகளை ஆய்வு செய்து அவற்றின் பண்பாட்டு முக்கியத்துவத்தை விளக்குகிறது.

**முக்கியச் சொற்கள் :** இசை, யாழ், குழல், முழவு ,தமிழிசை, இசைக்கருவிகள், பண்பாடு.

**முன்னுரை**

**உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்.**

**நிலைபெறுத்தலும். நீக்கலும். நீங்கலா**

**அலகு இலா விளையாட்டு உடையார்-அவர்**

**தலைவர்;அன்னவர்க்கே சரண் நாங்களே.**

இராமாவதாரம் என்ற பெயரில் கம்பரால் இயற்றப்பட்ட நூல் கம்பராமாயணம் ஆகும். வால்மிகியின் ராமாயணத்தை தழுவி இந்நூல் தமிழ் மொழியில் இயற்றப்பட்டுள்ளது. கம்பரால் இயற்றப்பட்டுள்ளதால் இந்நூல் கம்பராமாயணம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இந்நூலின் சிறப்பு கருதி இந்நூலை திருக்குறளுக்கு இணையாக போற்றி "தமிழுக்கு கதி" என்று இந்த இரு நூல்களையும் குறிப்பிடுவர். கம்பராமாயணம் தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த இடம் பெற்றுள்ளது. இது மதநூலாக

மட்டுமல்லாமல், வாழ்க்கை நெறிகளை கற்றுக்கொடுக்கும் ஒரு பெரிய காவியமாகவும் கருதப்படுகிறது.
இந்நூல் திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலில் நரசிம்மர் சன்னதி அருகில்அரங்கேற்றம் செய்யப்பட்டது. கம்பர் காலத்து சமூக, பண்பாட்டு மற்றும் கலை வாழ்வையும் பிரதிபலிக்கிறது. குறிப்பாக இசை குறித்த செய்திகள் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. அவை தமிழிசையின் தொன்மையையும் வளர்ச்சியையும் அறிய உதவுகின்றன.

**இசை வளம் நிறைந்த அயோத்தி**

அயோத்தி நகரின் செழிப்பை விவரிக்கும் போது கம்பர் இசை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைந்திருந்ததைப் பின்வரும் செய்யுளில் எடுத்துரைக்கிறார்.

**குழல் இசை மடந்தையர் குதலை, கோதையர்**

**மழலை, அம் குழல் இசை; மகர யாழ் இசை;**

**எழில் இசை மடந்தையர் இன்சொல் இன்இசை;**
**பழையர்தம் சேரியில் பொருநர் பாட்டு இசை.**

(பாலகாண்டம் – நகரப்படலம்)

இச்செய்யுளில் குழலிசை, மகரயாழிசை, பெண்களின் இனிய மொழி, பாணர்களின் பாடல் ஆகியவை இசை வாழ்க்கையின் அங்கங்களாகக் காட்டப்படுகின்றன. இதன் மூலம் அயோத்தியில் இசைக் கலை உயர்ந்த நிலையில் இருந்ததை அறியலாம்.

**இயற்கையும் இசையும்**

கம்பர் இயற்கையை இசையோடு இணைத்து வர்ணிப்பதில் சிறந்தவர். இயற்கையின் ஒலிகளை இசைக்கருவிகளின் ஒலிகளாகக் கற்பனை செய்து பாடுகிறார்.

**தண்டலை மயில்கள் ஆடத்**

**தாமரை விளக்கம் தாங்க,**

**கொண்டல்கள் முழவின் ஏங்க,**

**குவளை கண் விழித்து நோக்க,**

**தெண்திரை எழினி காட்ட,**
**தேம்பிழி மகர யாழின்**

**வண்டுகள் இனிது பாட,**

**மருதம் வீற்றிருக்கும் மாதோ.**

(நாட்டுப்படலம் )

இச்செய்யுளில் மேகத்தின் முழக்கத்தை முழவாகவும், வண்டின் ரீங்காரத்தை யாழிசையாகவும் கம்பர் சித்தரிக்கிறார். இயற்கையே ஒரு இசை அரங்கமாகத் தோன்றுகிறது.

**இசைக்கருவிகள் குறித்த செய்திகள்**

**கம்பராமாயணத்தில் பலவகையான இசைக்கருவிகள் குறிப்பிடப்படுகின்றன.**

**வளைஒலி, வயிரொலி, மகர வீணையின்**

**கிளைஒலி, முழவொலி, கின்னரத்து ஒலி,**

**துளைஒலி, பல்இயம் துவைக்கும் சும்மையின்**

**விளைஒலி, கடலொலி மெலிய விம்முமே.**

(பாலகாண்டம் – மிதிலைக் காட்சிப்படலம்)

இச்செய்யுளில் மகரவீணை, முழவு, கின்னரம், துளைக்கருவிகள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இதன்மூலம் அக்கால இசைக்கருவிகளின் பல்வகைத் தன்மையையும் அவற்றின் பயன்பாட்டையும் அறிய முடிகிறது.

**சூர்ப்பணகைப் படலம்**

**"தேனுண்ட வண்டின் இசை யாழின் நரம்பொலி போல் ஒலித்தது"**

விளக்கம்:

வண்டின் ரீங்கார ஒலி யாழிசையுடன் ஒப்பிடப்படுகிறது. இயற்கை ஒலியும் கருவி இசையும் ஒன்றிணையும் காட்சியாக இது அமைகிறது.

**வெற்றிக் களிப்பு – மதுவனப் படலம்**

**குதித்தனர் சிலர்நின்று குரவைகொண்டு**
**மதித்தனர் சிலர்வானம் வழங்கிப் போய்**
**துதித்தனர் சிலர்தோள் கொட்டி ஆர்த்தனர்**
**மிதித்தனர் சிலர்வேறு உழன்று ஆர்த்தனர்.**

விளக்கம்

இங்கு:

குரவை ஆடல்,தோள் கொட்டி தாளமிடுதல்,ஆரவாரம் செய்தல்

போன்ற இசை–நடனக் கூறுகள் இடம்பெறுகின்றன.

**சுந்தர காண்டம் ஊர் தேடு படலம்**

**குழலும் வீணையும் யாழும் என்று இனையன குழைய,**

**மழலை மென் மொழி, கிளிக்கு இருந்து அளிக்கின்ற மகளிர்,**
**சுழலும் நல் நெடுந் தட மணிச் சுவர்தொறும் துவன்றும்**

**நிழலும், தம்மையும், வேற்றுமை தெரிவு அரு நிலைய,**
இச்செய்யுளின் வழியாக குழல் யாழ் பற்றிய செய்திகள் அறிய முடிகிறது

**பாடுவார் பலர் என்னின், மற்று அவரினும் பலரால்**

**ஆடுவார்கள்; மற்று அவரினும் பலர் உளர், அமைதி**

**கூடுவாரிடை இன்னியம் கொட்டுவார்; முட்டு இல்**
**வீடு காண்குறும் தேவரால் விழு நடம் காண்பார்**
இச்செய்யுளின்வழியாக ஆடல் பாடல் குறித்த செய்திகள் கம்பராமாயணத்தின் வழி அறிய முடிகிறது

**மகர வீணையின், மந்தர கீதத்தின், மறைந்த,**

**சகர வேலையின் ஆர் கலி; திசைமுகம் தடவும்**
**சிகர மாளிகைத் தலம்தொறும் தெரிவையர் தீற்றும்**

**அகரு தூமத்தின் அழுந்தின, முகிற் குலம் அனைத்தும்.**

இச்செய்யுள் வழியாக மகரவீணை, பாடல் பற்றிய செய்திகள் காண முடிகிறது,
**கடி மணப் படலம்**

**பண்ணோ ஒழியா; பகலோ புகுதாது;**

**எண்ணோ தவிரா; இரவோ விடியாது;**

**உள் நோவு ஒழியா; உயிரோ அகலா;**

**கண்ணோ துயிலா; இதுவோ கடனே?**
இச்செய்யுள் வழியாக பண் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது
**பம்பை வாவி படலம்**

**பூ ஒடுங்கின; விரவு புள் ஒடுங்கின,**

**பொழில்கள்; மா ஒடுங்கின;**

**மரனும் இலை ஒடுங்கின;**

**கிளிகள் நா ஒடுங்கின;**

**மயில்கள் நடம் ஒடுங்கின;**

**குயில்கள் கூ ஒடுங்கின;**

**பிளிறு குரல் ஒடுங்கின, களிறு**

இச்செய்யுள் வழியாக மயில்கள் நடனம் ஆடியதாகவும் கோயில்கள் பாடியதாகவும் இசை நடனம் குறித்த செய்திகளை காண முடிகிறது.

**இராவணனின் இசைத் திறமை**

**“வீணை நரம்பினைத் தன் நரம்பாக மேவி,**

**ஏணியில் ஏறிய இசையினால் ஈசனை,**

**பேணி வழிபட்ட பெருந்தவத் தோனையும்,**

**ஆணையின் வந்தது அழித்தனன் காலமே.**

பொருள்

இராவணன் தனது உடல் நரம்புகளையே வீணை நரம்புகளாகக் கொண்டு இசை பாடி சிவபெருமானை வழிபட்டவன் என்று குறிப்பிடப்படுகிறார்.

**முடிவுரை**

கம்பராமாயணம் தமிழிசை வரலாற்றிற்கு முக்கியமான இலக்கிய ஆதாரமாக விளங்குகிறது. பண்ணிசைப் பாடல்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை சமூகத்தில் சிறப்பாக வளர்ந்திருந்ததை கம்பராமாயணத்தில்உள்ள 6 காண்டங்கள் வழியாக எடுத்துக்காட்டுகிறது. இசை வளம், இயற்கை இசை வருணனைகள், பல்வேறு இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள் ஆகியவை கம்பர் காலத்து இசை வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. தமிழர் இசை மரபின் செழுமையை கம்பராமாயணம் உணர்த்துகிறது. எனவே கம்பராமாயணம் இலக்கியப் பெருமையோடு தமிழிசை ஆய்விற்கும் அரிய ஆதாரமாகத் திகழ்கிறது.

**துணை நின்ற நூல்கள்**


1 கம்பர். கம்பராமாயணம்: பாலகாண்டம். தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை, தமிழ்நாடு அரசு, 1989.

2 அருணாசலம், மு. தமிழ் இசை இலக்கிய வரலாறு. கடலகம், 2009.

3 இராமநாதன், சு. தமிழிசை ஆய்வுகள். சென்னைப் பல்கலைக்கழகம், 2005.

4 சுந்தரம், வி.ப.கா. தமிழிசை வளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1997.

5 வரதராசனார், மு. தமிழ் இலக்கிய வரலாறு. சாகித்ய அகாடெமி, 1972.